முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 564**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

15.04.2021, வியாழக்கிழமை

1. கலியுகத்தின் இடர்போக்க வந்த
கருணைவடிவான ஆறுமுக அரங்கனே
பழிபாவம் இல்லாத பரோபகார நல்லுலகை
பண்பான மக்கள் படையை உருவாக்க
2. ஆக்கநல் என் சக்தியாய் வந்த அரங்கனே
அகிலமதில் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
தேக்கமின்றி சுப்ரமணியர் யானும் அருளுவேன்
தேசிகன் தர்மம் உலகை வெல்லும்
3. வெல்லுமப்பா அரங்கன் கொள்கை கலியின் துன்பங்களை
வினை போக்கி மக்களை ஞானவான்களாக்கி
இணையில்லா ஞானயுகம் படைக்கவே
இந்த அவதாரத்தை எடுத்துள்ள அரங்கன்
4. அரங்கனுக்கு ஆறுமுகன் யான் பெருந்துணையாய்
ஆற்றலாய் அனுதினமும் சக்தி வழங்கி வர
வரங்கள் கூட்டி அரங்கன் தொண்டர்படைகளையும்
வலுவாக்கி ஆறுமுகன் யானும்
5. யானும் ஞானசபையாக இந்த குடிலை
ஞானிகள் நிறைந்த சபையாக்கி வர
தானதர்மம் பெருகுகின்ற இந்த சக்தி மூலமே
தரணியில் பெருமாற்றம் நடக்கக்கூடும்
6. கூடவே அரங்க ஞானியை தொடர்ந்து
குவலயத்தில் கலியுக மக்களை ஞானிகளாக்கும்
ஈடேற்றம் பிலவ இவை ஆண்டில் நடந்து வர
இணைந்து அரங்கன் தொடர்புக்கு தடையற வரும் மக்கள்
7. மக்கள் மூலம் உலகோர் ஞானிகள் ஆகுகின்ற
மகத்துவமான மாற்றம் இனி நடந்தேறும்
ஆக்கமுடன் பல சூட்சுமங்களும் சூட்சும சக்திகளும்
ஆறுமுகன் யான் அரங்கனுக்கு இன்னும் ஈந்துவர

8. வருகின்ற இந்த சூழலில்
வையகத்தார் அரங்கன் தொடர்பை கூட்டகூட்ட
தருகின்ற அரங்கன் தீட்சையாலும் தர்மத்தாலும்
தரணியில் பெருமாற்றம் சிறப்புற நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.